# சிங்காரச்சென்னை

SINGHARA CHENNAI

ஆசிரியர் S. ரங்கநாதன் | தமிழ் மாதம் இருமுறை

| 20 பிப்ரவரி 2010 - 04 மார்ச் 2010 | மலர் 2 - இதழ் 04 | இலவச விநியோகம் | 8 பக்கங்கள் |
|---|---|---|---|
| 20 FEBRUARY 2010 - 04 MARCH 2010 | VOLUME 2 - ISSUE 04 | Free distribution | 8 PAGES |


## நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை மற்றும் கல்லூரி சாலையில் விபத்தினை தடுக்க சாலை நடுவே தடுப்புச் சுவர் (Center Median) அமைக்கப்படுமா?

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் அபூர்வா சங்கீதா ஹோட்டல் முதல் குட்செபர்ட் பள்ளி நுழைவுவாயில் வரை (ஸ்டூடன் ஜெராக்ஸ் அருகில்) பொதுமக்களும் பள்ளி மாணவர்களும் பலர் சாலையைக் கடப்பதால் அங்கே ஒருவழிப்பாதையில் வரும் வாகனங்கள் அதிக வேகமாக வருவதால் சாலையைக் கடக்கும் பாதசாரிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அடிக்கடி விபத்து ஏற்படுகிறது.

எனவே போக்குவரத்து காவல்துறை அதிகாரிகள் அந்த இடத்தில் சாலையின் நடுவே தடுப்புச் சுவர் (Center Median) அமைத்து பொதுமக்கள் விபத்தில் சிக்காமல் சாலையைக் கடக்க வழிவகுத்துத் தர வேண்டுமென பொதுமக்கள் சார்பாக சிங்காரசென்னை கேட்டுக்கொள்கிறது.

இதேபோல் கல்லூரி சாலையில் வானிலை ஆராய்ச்சி நிலைய பேருந்து நிறுத்தம் அருகிலும் பொதுமக்கள் சாலையைக் கடக்க எவ்வித வசதியோ பாதுகாப்போ இல்லை.

எனவே அங்கேயும் ஸ்பீட் பிரேக்கர் அல்லது சாலையின் நடுவே தடுப்புச் சுவர் (Center Median) அமைத்து பாதசாரிகள் சாலையைக் கடக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் சார்பாக சிங்காரசென்னை கேட்டுக்கொள்கிறது.



## மின்கட்டணம் கட்ட கடைசி தேதி

மின்சாரம் கட்டணம் கட்ட கடைசி தேதி இனிமேல் 15ம் தேதி கிடையாது.

தங்கள் வீட்டில் ரீடிங் எடுத்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் உங்கள் கட்டணத்தை செலுத்த வேண்டும். அதாவது பிப்ரவரி 16ம்தேதி ரீடிங் எடுத்தவர்கள் மார்ச் 7ம் தேதிக்குள் மின்கட்டணத்தை செலுத்த வேண்டும்.

இந்த புதிய முறை இம்மாதம் முதல் அமுலுக்கு வந்துள்ளது.


ஆயிரம் விளக்கு பகுதி 107வது வட்டத்தில் **மிக விரைவில் திறப்பு விழா**

**சென்னை ஸ்டார் பிரவிஷன் ஸ்டோர்**

**சென்னை ஸ்டார் கேட்டரிங் சர்வீசஸ்**

பழைய எண்.26/1, புதிய எண். 67/1, வைகுண்டபுரம் முதல் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

**தொலைபேசி : 2817 2803, 2817 0465**



**மொபைல் : 93826 44132, 98417 10708**



**கே.ஆர்.பி. ருத்ரன்**

உரிமையாளர்

### கோயில் நிலங்களில் குறிப்பிட்ட காலம் வசித்தோருக்கு பட்டா வழங்க வேண்டும்

**சென்னையில் பிரகாஷ் காரத் பேச்சு**

சென்னையில் அரசு நிலங்களில் இடம் கண்டுபிடித்து வீடு கட்டி பல ஆண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களுக்கு பட்டா வழங்கி, அவர்களது குடியிருப்பு உரிமையை தமிழக அரசு சட்டப்பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும். அதே போல் கோயில் நிலங்களில் பல தலைமுறைகளாக வாடகை கொடுத்து குடியிருக்கும் மக்களுக்கு அச்சுறுத்தலாக ஒரு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசுக்கு தேவையான நிலம் எடுத்துக்கொள்ளப்படும் என்று அந்த ஆணை கூறுகிறது. அந்த ஆணையை தமிழக அரசு திருத்த வேண்டும். குறிப்பிட்ட காலம் வாழ்ந்தோருக்கு பட்டா வழங்க வேண்டும். இவ்வாறு பிரகாஷ் காரத் சென்னை புரசைவாக்கத்தில் நடைபெற்றக் கூட்டத்தில் பேசினார்.


Mobile Gallery

All Mobile Accessories
98402 99412
98408 42544
98843 47291
Service in Just 15Min.
SALES & SERVICE
எல்லா ரீசார்ஜ் கூப்பன்களும் கிடைக்கும்
110, Valluvarkottam High Road,
(Facing North Mada Street)
Nungambakkam, Chennai - 34.

ஆவின் பாலகம்
ஐஸ்கிரீம், பால்கோவா,
மைசூர்பாக், தயிர், மோர்,
வெண்ணெய், நெய் கிடைக்கும்.
சூடான பால் கிடைக்கும்.
80, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை,
போலீஸ் குவார்ட்டர்ஸ், நுங்கம்பாக்கம்


Sri Sai
Konica
BABA DIGITAL STUDIO
STILLS & VIDEO COVERAGE

E.P.Maadhavan
97106 05390

Old No.198, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034

WE'RE READY TO HELP YOU START THE PATH TO YOUR NEW CAREER
Dolphin™
Computer Academy
NUNGAMBAKKAM

Learning Professional Courses
- MS Office, Tally 9.0 ERP
- C, C++,VB, Java, J2EE
- C#, Vb.Net, ASP.Net
- DTP - ( Photoshop, Corel Draw, Page Maker )
- WAMP - Windows, Apache, MySql, PHP
- Web Design - HTML, CSS, Flash, DreamWeaver
- MCP, CCNA, Software Testing,
- Mobile Communication

Special Offer upto 75%*

Tel : 2827 5522,
Mob : 9094444880 , 9444422721

ஹார்டுவேர் & நெட்வொர்க் இன்ஜினியர்
Hardware & Network Engineer

காலம்: 4 மாத செய்முறைப் பயிற்சி,
தினமும் 2 மணி நேர

மொபைல் போன் சர்வீஸ் இன்ஜினியர்
Diploma in Mobile Phone Service Engineer

காலம்: 2 மாத செய்முறைப் பயிற்சி,
தினமும் 2 மணி நேரம்
கல்வி தகுதி: 8 / 9 / 10 / +2 / ITI / Diploma / Degree (Pass / Fail)
Employed / Unemployed / Housewives

பயிற்சியின் சிறப்பு அம்சங்கள்
- 2010-ல் செல்போன் இணைப்புகளின் எண்ணிக்கை 50 கோடியை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் 5,00,000 பேருக்கு வேலைவாய்ப்பு...
- Dolphin Mobile Phone Academy என்பது மொபைல் பயிற்சிக்கு என்றே நவீன முறையில் அமைக்கப்பட்ட பயிற்சி நிறுவனம்.
- 100% தரமான செய்முறைப்பயிற்சி
- செல்போன் சாப்ட்வேர் மற்றும் ஹார்டுவேர் இரண்டிலும் தரமான பயிற்சி
- ஆண்/பெண் இருபாலருக்கும் உகந்த பயிற்சி
- குறைந்த கல்வி தகுதி உள்ளவர்களும் கற்றுக்கொள்ளலாம்.
- தமிழ்/ஆங்கிலம் மொழியிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.
- சுயதொழில் (சர்வீஸிங் மையம் / உதிரி பாகங்கள் விற்கும் கடைகள் அமைக்க அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- Nokia, Samsung, Motorola, Sony Ericson, Airtel, Aircel, Vodaphone, MTS, Tata Indicom, Reliance போன்ற பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.
- எங்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு தயாரிப்பு, சர்வீசிங் மற்றும் விற்பனை நிறுவனங்களில் வேலை கிடைக்க இலவச உதவி வழங்கப்படும்.
- அனைத்து வசதிகளுடன் கூடிய பிராக்டிகல் வகுப்புகள்

No 5, Noor Veera Samy Iyer Street, 2nd Lane, (Behind Nungambakkam Police Station), Nungambakkam. Ch-34

## ஈ.வெ.ரா. சிந்தனை நூலுக்கு நிதி



*பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் நூலுக்கு முற்பதிவு நிதி அளித்த விழாவில் ஆதி சிவலிங்காச்சார்யா பீடத்தின் 64வது மகா சன்னிதானம் அறிவுநிறை சிவசண்முக ஞானாச்சார்ய அடிகளார் அவர்கள் நூலின் தொகுப்பாளர் வே. ஆனைமுத்து அவர்களிடம் ரூபாய் 1,30,000க்கான காசோலையை வழங்கினார்.*
*உடன் 108வது வட்ட மாமன்ற உறுப்பினர் வா.கணேசன்*

## போலியோ சொட்டு மருந்து முகாம்
## மாமன்ற உறுப்பினர் வா.கணேசன் துவக்கி வைத்தார்




**சிங்காரச்சென்னை**

(தமிழ் மாதம் இருமுறை)

58/19, வடக்கு மாட வீதி, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.

**போன் : 98403 44783, 4359 6070**

**மின்னஞ்சல் : singharachennai@gmail.com**





# அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வேங்கடேச பெருமாள் அசலாத்தம்மன் திருக்கோயில்

# தெப்பத் திருவிழா

சீர்மல்கும் தெய்வத் தமிழ்நாட்டின் தலைநகரமாக விளங்கும் தருமமிகு சென்னை மாநகரில், பண்டைய நாளில் ப்ருந்தாரண்யபுரி என்றும் பொம்மராசபுரம் என்றும் அழைக்கப்பெற்ற நுங்கம்பாக்கத்தில் சுப்பு தெய்வநாயக முதலியாரால் ஸ்தாபிக்கப்பெற்ற அருள்மிகு அகத்தீசுவரர் அருள்மிகு பிரசன்ன வேங்கடேச பெருமாள் திருக்கோயில்களில் தெப்பத்திருவிழா, திருவள்ளுவர் ஆண்டு மாசி மாதம் 19ந்தேதி (3-3-2010) புதன் கிழமை முதல் மாசி மாதம் 22ம் தேதி (6-3-2010) சனிக்கிழமை வரை அருள்மிகு அகத்தீசுவரர் பிரசன்ன வேங்கடேச பெருமாள் திருக்கோயில் திருக்குளத்தில் நடைபெற உள்ளது. முதல்நாள் அருள்மிகு விநாயகரும் ( உபயம் : திருமதி. டாக்டர்.கமலா செல்வராஜ்), இரண்டாம்நாள் அருள்மிகு அகிலாண்டேசுவரி உடனுறை அகத்தீசுவரரும்(உபயம் : ஆர். துரைராஜன், எம்.வி.ஜெய்சங்கர்), மூன்றாம் நாள் வள்ளிதெய்வானை உடனுறை முருகப்பெருமானும்(உபயம் : கு.செல்வப்பெருந்தகை,MLA., குன்றத்தூர் எஸ்.பக்தவச்சலம் முதலியார்), நான்காம்நாள் ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாளும் (உபயம் : எம்.ஜி.குமார்) திருக்குள தெப்பத்தில் வலம் வந்து திருவருள் புரிவர்.

இவ்விழாவில்

திருமிகு. S. **ராஜேந்திரன்**, IPS, அவர்கள்
Inspector General of Police, Chennai,
Economic Offence Wing CCIW - CID & IDOL Wing - CID
திருமிகு. G.M.P. **ரெட்டி**, IPS, அவர்கள்
nspector General & Chief Security Commissioner
Rly. Protection Force
திருமிகு. V.A. **ரவிக்குமார்**, IPS, அவர்கள்
Joint Commissioner of Police, Central Zone, Chennai
திருமிகு. T.S. **அன்பு**, IPS, அவர்கள்
Dy. Commissioner of Police, Central Zone, Triplicane
திருமிகு. M. **அன்புமொழி**, M.A., M.Phil, அவர்கள்
Addl. Superintendent of Police, (Retd.)
திருமிகு. M. **ஜெகபர்சாலி**
Asst. Commissioner of Police, Nungambakkam
திருமிகு. **வா.கணேசன்**
108வது வட்ட மாமன்ற உறுப்பினர்
சென்னை மாநகராட்சி

திருமிகு. **ப.ரா.சம்பத்**, இ.ஆ.ப.அவர்கள்,
ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை,
திருமிகு. **த.பிச்சாண்டி**, இ.ஆ.ப (ஓய்வு) அவர்கள்
முன்னாள் ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை,
திருமிகு. **தி. ஜெயராமன்**, பி.ஏ.பி.எல்,
கூடுதல் ஆணையர் இந்துசமய அறநிலையத்துறை,
திருமிகு. **இரா. சுப்பிரமணியன்**, பி.ஏ.பி.எல்,
கூடுதல் ஆணையர், (விசாரணை) இந்துசமய அறநிலையத்துறை,
திருமதி. **ந.திருமகள்**, பி.எஸ்.சி, எம்.எல்,
இணை ஆணையர், (தலைமையிடம்) இந்துசமய அறநிலையத்துறை,
திருமதி. **ஹரிபிரியா**, பி.எல், பி.ஜி.டி, எல்.ஏ,
இணை ஆணையர், (திருப்பணி) இந்துசமய அறநிலையத்துறை,
திருமிகு. **பி. வாசுநாதன்**, எம்.ஏ.பி.எல்,
இணை ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை,
திருமிகு. **சு.இராமு**,
உதவி ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை,

மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். இறை அன்பர்கள் அனைவரும் தெப்பத் திருவிழாவினைக் கண்டு தரிசித்து இறையருள் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்

**க. அருட்செல்வன்**, பி.எஸ்சி.பி.எட்.
செயல் அலுவலர்

**இரா. கல்யாணராகவன், இரா.இராதாகிருஷ்ணன்**
பரம்பரை அறங்காவலர்கள்

தெப்பம் வடிவமைப்பு உபயதாரர்
திருமதி டாக்டர், **கமலா செல்வராஜ்,**
G.G.Hospital, Nungambakkam

இரும்பு டிரம் உபயதாரர்
**திரு.என்.ஏழுமலை செட்டியார்**
முத்து டிரேடிங் கம்பெனி, சென்னை - 1

திருமுறை வேதபாராயணம், திவ்யபிரபந்தம் உபயம்
**திரு.எல். நடராஜன்,** M.A.B.L.
21, ஜம்புலிங்கம் தெரு, சென்னை - 34

**தெப்பம் மின்விளக்கு அலங்காரம் மற்றும் பந்தல் உபயதாரர்கள்**

**திரு.எம்.வி.ஜெய்சங்கர், திருஆர்.பாலசுப்பிரமணியம், திரு. ஹரிபாஸ்கர், திரு.பி.காளத்திநாதன், சிங்காரசென்னை எஸ்.ரங்கநாதன், திரு.டி.ஆர்.அசோக்குமார், திரு.நாகபாண்டியன் நாடார்**

குறிப்பு : அருள்மிகு அசலாத்தம்மன் கோயிலில் பாலஸ்தாபனம் செய்திருப்பதால், அசலாத்தம்மன் தெப்போற்சவம் நடைபெறாது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

## பக்திச்சுவை நனி சொட்டும் ஒலித்தட்டுகள்













மாணிக்கவாசகர் அருளிய
**திருவாசகம் முழுதும்**
எல்லோரும் பாடும்
எளிய இசையில்

கிடைக்கும் இடம்
வெங்கடேசன் பூக்கடை
அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில்

**எமது பிற வெளியீடுகள்**
அமர்நீதி நாயனார் வரலாறு,
அண்ணாமலைக்கு அரோகரா,
சிவனடியே சிந்திப்போம்
போற்றித்திருவகவல் (ஒளிப்படம்)

நீங்களும் தமிழில் தட்டச்சு செய்யலாம்

**வண்ணத்தமிழ் மெல்லியம்**
ஆங்கிலத்தில் தட்டச்சு செய்தால்
தமிழில் வரும்

தயாரிப்பு
**கணியத்தமிழ் சாஃப்ட்வேர் (பி) லிட்.,**
எண்1, 3ஆவது பிரதானசாலை, அண்ணாஜி நகர்
கே.கே.நகர் மேற்கு, சென்னை - 600078 தொலைபேசி : 9841087052

# ARUN TAILORS

No.5, Kutty Street,
Nungambakkam, Chennai-34.
**2825 6565, 94445 55565**
**Elegant Men's Wear, Specialists in Catering, Industrial, Hospital, School Uniform and All Type of Tailoring.**

# ARUN UNIFORMS

No.19, Kutty Street, Nungambakkam, Chennai-34.
**2825 6721, 4218 6721**
**Hotel Management, Hotels, Companies, Industrial Uniform Available.**

# ARUN FASHIONS

No.304, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai-34.
**Ph : 2825 8585**
**Exclusive for Ladies & Childrens Tailoring**

# ARUN MEN'S WEAR

**Pant, Shirt, Safari, Wedding Suit, Blazzar & all types of Tailoring**
**No. 65, Valluvar kottam high Road,**
**Nungambakkam, Chennai - 34.**
**(Opp. Police Qtrs. Bus Stop)**
**Ph : 2825 9595**

## APVP தேவஸ்தானத்தில் திருவிளக்கு பூஜை

பிப்ரவரி 5, 2010 அன்று அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 308 திருவிளக்கு பூஜை வெகுவிமர்சையாக நடைபெற்றது. கொலு மண்டபத்தில் சுவாமி அகஸ்தீஸ்வரர் சமேத அகிலாண்டேஸ்வரி பூக்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டு அருகில் கிளை விளக்குகளுடன் அமர்ந்திருக்க 308 விளக்குகள் வரிசையாக வைக்கப்பட்டு பெண்கள் எல்லோரும் வரிசையாக அமர்ந்து பூஜை செய்தனர். அர்ச்சகர் திரிசதியை, அழகிய தமிழில் படிக்க பெண்கள் குங்குமத்தால் அர்ச்சனை



செய்தனர். ஒரு சேர அத்தனை தீபஜோதியும் பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருந்தது. தீப தரிசனம் மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் தெய்வாம்சமாகவும் இருந்தது. குத்துவிளக்கு என்றாலே மேல்பாகத்தில் பிரம்மா, நடுபாகத்தில் விஷ்ணு, அடிப்பாகத்தில் சிவனும் வாசம் செய்கின்றனர். ஜோதியில் லஷ்மியும் வாசம் செய்கிறாள் என்பது ஐதீகம். ஜோதி எப்போதுமே மேல்நோக்கி எரியும். எனவே, ஜோதியை தியானம் பண்ண பண்ண நம் எண்ணங்களும் மேல்நோக்கி இருக்கும். அதுமட்டுமல்ல ஜோதி எப்படி இருளைப் போக்குகிறதோ, அதைப்போல நம் மன இருளும் அகலும். ஒருவிளக்கு ஜோதியினால் ஓராயிரம் விளக்குகள் ஏற்றலாம். அதனால் அந்த ஜோதியின் தன்மை குறைவதில்லை. அதன் பிரகாசம்தான் அதிகரிக்கும். ஹிருதயம் என்ற விளக்கில் அன்பு என்ற எண்ணெய் விட்டு திரி என்ற ஆணவமானது தீக்குச்சி என்ற ஞானத்தினால் விளக்கேற்றும்பொழுது திரி எப்படி கொஞ்சம் கொஞ்சமாக எரிந்து ஒன்றுமில்லாமல் போகிறதோ அதைப்போல நம் வினைகளும் அகன்று நாம் அந்த ஜோதி ஸ்வரூபனோடு ஐக்கியமாகிறோம். பொதுமக்கள் மிகவும் அமைதியுடன் தீப தரிசனம் செய்து அம்பாளுக்கு அர்ச்சனை செய்த அனைத்து மங்களப் பொருட்களும் மகிழ்ச்சியுடன் எடுத்துச் சென்றனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை செயல் அலுவலர் க.அருட்செல்வன் மற்றும் பரம்பரை அறங்காவலர்கள் இரா. கல்யாணராகவன், இரா.இராதாகிருஷ்ணன் ஆகியோர் மிக சிறப்பாக செய்திருந்தனர்.

## "மணம் வீசும் பன்மலர்கள்" - நூல்வெளியீட்டு விழா

குரோம்பேட்டை இலட்சுமி அம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 28-2-2010 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணிக்கு பணிச்செம்மல் அருள்நிதி இரா. பரஞ்சோதி அவர்களின் 'மணம் வீசும் பன்மலர்கள்' (ஆய்வுக்கட்டுரைகள்) நூல் வெளியீட்டு விழா குரோம்பேட்டை திருக்குறள் பேரவை கூட்டத்தில் நடைபெற இருக்கிறது.

மேற்கண்ட விழாவில் தெ.பொ.இளங்கோவன் அவர்கள் தலைமையும், புலவர் கு.கணபதி வரவேற்பும், இராம.குருமூர்த்தி அவர்கள் முன்னிலையும், டாக்டர் புலவர் பாண்டியன் அவர்கள் நூலை வெளியிட்டும் சிறப்புரையாற்றுகிறார்.

நூலின் முதல் படியை ஸ்ரீஇராமானுசர் பொறியியல் கல்லூரியின் தாளாளர் எம்.நித்தியாசுந்தர் அவர்களும், செயலாளர் ஜி.காமராசு அவர்களும் பெற்றுக்கொள்கிறார்கள்.

இரா.பரஞ்சோதி அவர்கள் ஏற்புரையாற்றுகிறார். எமரால்டு பதிப்பகத்தின் உரிமையாளர் திரு.கோ.ஒளிவண்ணன் உறவுகளை உருவாக்கி உலகினை ஒன்றிணைப்போம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற இருக்கிறார். மேற்கண்ட விழாவிற்கான ஏற்பாடுகளை பரஞ்சோதி பவானி அறக்கட்டளையினர் சிறப்பாக செய்து வருகின்றனர்.

தமிழ் டைப்பிங் தெரிந்தவர்கள் வேலைக்குத் தேவை

**Wanted Tamil Typist with basic computer knowledge**
**98403 44783**
**99412 98629**

**INSURANCE SERVICES**

**Mediclaim with unlimited coverage**
**30 to 35 % discount on vehicle insurance renewal premium**

**contact : 99629 72844**

**மாதந்தோறும் படியுங்கள்**

ஓட்டுநர் ஓசை
ஓட்டுநர் சமுதாய மாத இதழ்

**வீடு / ஃப்ளாட் / அலுவலகம் வாடகைக்கு / வாங்க / விற்க**

**விக்னேஷ் ஹோம்ஸ்**
இரண்டாவது மாடி, பழைய எண். 188, புதிய எண். 132,
வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம் காவல்நிலையம் எதிரில்,
**ரூபாய் 3,000, 4,000, 7,000, 8,000 மற்றும் அனைத்து பட்ஜெட்டில் வீடு வாடகைக்கு உள்ளது.**



**N.முரளிஸ்ரீதரன்,**
**ஆயிரம் விளக்கு பகுதி துணைதலைவர்,**
தமிழ்திருநாடு நிலம், வீடு, மனை தரகர்கள் நலச்சங்கம்

**93807 04083, 93808 40393**

## மாநகரப் போக்குவரத்து கழகம் நுங்கம்பாக்கம் பகுதி மக்கள் வசதிக்காக புதிய பேருந்து வழித்தடம் இயக்குமா?

சென்னை நுங்கம்பாக்கத்திலிருந்து கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு நேரடி பஸ்வசதி கிடையாது. எனவே போக்குவரத்து துறை அதிகாரிகள் கோயம்பேடு CMBT - கோயம்பேடு CMBT வட்டவடிவில் (வடபழனி முருகன் கோயில், மீனாட்சி கல்லூரி, வள்ளுவர்கோட்டம், ஸ்டெர்லிங்சாலை, பச்சையப்பன் கல்லூரி, அமைந்தகரை, அரும்பாக்கம்)வழியாக ஒரு புதிய வழித்தடத்தை அறிமுகப்படுத்தினால் நுங்கம்பாக்கம் பகுதிமக்கள் மட்டுமல்லாமல் மற்ற பகுதியிலுள்ள பொதுமக்கள் பலரும் பெரிதும் பயனடைவார்கள்.

மேலும் நுங்கம்பாக்கத்திலிருந்து ஜெமினி, அண்ணாசாலை, ராயப்பேட்டை, மைலாப்பூர், மந்தவெளி, பாண்டிபஜார், மேற்குமாம்பலம், தாஷபிரகாஷ், எக்மோர் தாசில்தார் அலுவலகம், மற்றும் பிரசிடென்சி பள்ளி பகுதிக்கு நேரடி பஸ்வசதி இல்லை.

பிராட்வே - தாம்பரம் அல்லது பிராட்வே - கே.கே.நகர் என்ற மார்க்கத்தில் புதிய பேருந்து வழித்தடம் அறிமுகம் படுத்தினாலும் பொதுமக்கள் பலரும் பயனடைவார்கள்.

பிராட்வே, சென்ட்ரல், தாஷபிரகாஷ், கேஎம்சி, ஸ்டெர்லிங்ரோடு, வள்ளுவர்கோட்டம், வாணிமஹால், பாண்டிபஜார், துரைசாமி பாலம், அயோத்திமண்டபம், போஸ்டல் காலனி, அசோக்பில்லர்) வழியாக கே.கே.நகர் அல்லது தாம்பரத்திற்கு பேருந்துகளை இயக்கினால் நல்ல வரவேற்பு இருக்கும்.

பல ஆண்டுகளாக நுங்கம்பாக்கம் காவல்நிலையம் வழியாக இயங்கிவந்த மாநகரப்பேருந்து வழித்தடம் 9, 9A, 17C, 25, 25B, 26, 28J, போன்ற பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளது. அதற்கு மாற்றாக எவ்விதப் பேருந்து வசதியும் செய்துதரப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நுங்கம்பாக்கம் பகுதி மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் சார்பாக சிங்காரச்சென்னை கேட்டுக்கொள்கிறது.

## நுங்கம்பாக்கத்தை புறக்கணிக்கும் தபால்துறை

சென்னை நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் இயங்கிவந்த நுங்கம்பாக்கம் பஜார் தபால்நிலையம் கடந்த ஆண்டு அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டு சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் மகாலிங்கபுரத்திற்கு மாற்றப்பட்டது.

தற்போது மகாலிங்கபுரம் அலுவலகமும் தியாகராய நகர் அபிபுல்லா சாலை - வடக்கு உஸ்மான் சாலை அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளதால் நுங்கம்பாக்கம் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

எனவே, தபால்துறையினர் நுங்கம்பாக்கம் காவல்நிலையம் அருகாமையில் தபால்நிலையம் அமைத்துத்தந்தால் பகுதி பொதுமக்கள் பெரிதும் பயனடைவார்கள். காவலர் குடியிருப்பு வளாகத்திலோ மாநகராட்சிக்கு சொந்தமான இடத்திலோ அல்லது அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்திலோ இடம்பெற்று தபால் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென பொதுமக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

அல்லது லயோலா கல்லூரி வளாகத்தில் மின்சார வாரியம் இடம்பெற்றது போல தபால்துறையும் இடம்பெற்று தபால் அலுவலகம் அமைத்துதர வேண்டுமென பொதுமக்கள் சார்பாக சிங்காரசென்னை கேட்டுக்கொள்கிறது.

**www.chennai34.com**



RNI Regn. No.TN TAM/2001/03914 R.Dis.No.1288/2008



## உழைக்கும் பத்திரிகையாளர்களின் குடும்ப விழா

கிறிஸ்துமஸ் - புத்தாண்டு - பொங்கல் ஆகிய திருநாட்களை இணைத்து உழைக்கும் பத்திரிகையாளர்களின் குடும்ப நல்லிணக்க விழா



கடந்த 7-2-2010 ஞாயிறு அன்று சிறப்பாக நடைபெற்றது.

பத்திரிகையாளர்களின் குழந்தைகள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் சுமார் 300க்கும் மேற்பட்டோர் உற்சாகமாக பங்கு கொண்ட இந்த விழாவிற்கு தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் டி.எஸ்.ரவீந்திரதாஸ் தலைமை வகித்தார்.

சென்னை மாவட்டத் தலைவர் ஏ.ஜே.சகாயராஜ் வரவேற்றார்.

சென்னை மாநகர போக்குவரத்து காவல்துறை கூடுதல் ஆணையர் ஷகில் அக்தர் விழாவை துவக்கி வைத்து சங்கத்தில் வடிவமைக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் வாகனங்களில் ஒட்டும் பிரஸ் ஸ்டிக்கர் (Press Sticker) வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றினார்.

பத்திரிகையாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் பங்கெடுத்துக் கொண்ட அனைவருக்கும் பல்வேறு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மாவட்ட துணைத்தலைவர்கள் கே.ராஜேந்திரன், சண்முகவேலு, மாவட்ட நிர்வாகிகள் பாக்கியராஜ், ரவி அர்ஜுன், சுரேஷ், சாம் ரமேஷ், பாலா உள்ளிட்டோர் சிறப்பான ஏற்பாடுகளை செய்தனர்.

## பேருந்து நிறுத்தத்திற்கு நிழற்குடை தேவை




நுங்கம்பாக்கம் வள்ளுவர்கோட்ட நெடுஞ்சாலையில் உள்ள மார்க்கெட் பேருந்து நிறுத்தத்திலும் ஸ்ரீபவன் ஹோட்டல் அருகிலுள்ள காவல்நிலையப் பேருந்து நிறுத்தத்திலும் பயணிகள் நிழற்குடை இல்லாத காரணத்தினால் மழை, வெயில் போன்ற நேரங்களில் மிகவும் சிரமத்துடன் பேருந்துக்காக காத்திருக்கவேண்டிய நிலை உள்ளது.



மேற்கண்ட இடத்தில் உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நிழற்குடை அமைத்து தர பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.



மேலும் சுதந்திரதினப்பூங்கா எதிரில் பேருந்தே நிற்காத இடத்தில் பழைய பேருந்து நிழற்குடை நடைபாதையை ஆக்கிரமித்து இருக்கிறது. இதை அகற்றவும் தேவையான இடத்தில் நிழற்குடை அமைக்கவும் நடவடிக்கை தேவை.

India's No.1
FAST TRACK®
Call Taxi
CHENNAI
2473 2020
2888 9999

Owned, Published and Printed by **S. RANGANATHAN,** published from 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034 and printed at **J.S.R. GRAPHICS & PRINTERS**, 58/19, North Mada Street, Nungambakkam, Chennai-600 034. **Editor: S. RANGANATHAN.**